**தலைப்பு 252 – தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 செப்தெம்பர் 18 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத்

தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,994.79 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,958.06 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய ஏற்பாடுகளில் ரூபா 36.73 மில்லியன் அதாவது 1.84 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 683.90 | 673.17 | 10.73 | 1.57 |
| மூலதன | 1,310.89 | 1,284.89 | 26.00 | 1.98 |
| மொத்தம் | **1,994.79** | **1,958.06** | **36.73** | 1.84 |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25201 | 44.00 | 32.19 | 25.00 | 26.51 | 250.00 | 138.25 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 40.69 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 252 – தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில்

10 சதவீதத்திற்கும் 43 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) 04 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு போதாமையின் காரணமாக குறைநிரப்பு நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய ஆரம்ப நிதிஏற்பாட்டில் 5 சதவீதம் முதல் 110 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 416,126 தொகை அறவிடுவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பல்வேறு நிறுவனங்களுக்கு இட மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதிகளின் ரூபா 192,051 கூட்டுமொத்தம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 உள்ளகக் கணக்காய்வு**

சகல மாவட்ட செயலகத்தின் கிளை அலுவலகங்களையும் 13 பிரிவுகளையும் உள்ளடக்கிய திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக 04 உத்தியோகத்தர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**3.4 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2012 இன் குடிசன தொகைமதிப்பு அறிக்கை ஒட்டுமொத்த இலங்கையையும் மேவும் வகையில் தயாரித்து அச்சிடுவதற்கு

திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்தப்பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014/2015 சமூக விஞ்ஞானம் மற்றும் சுகாதார மெய்மையாய்வின் வினாக்கொத்தொன்றைத் தயாரித்து அச்சிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப வினாக்கொத்து மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 இன் வருடாந்த கைத்தொழில் மெய்மையாய்வு அறிக்கை 2014 ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 இன் நிர்மாணக் கைத்தொழில் மெய்மையாய்வின் வருடாந்த அறிக்கை 2014 ஆம் ஆண்டின் 2 ஆவது காலாண்டில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013/2014 இன் பொருளாதார புள்ளிவிபரத் தகவல்களை சேகரிக்கும் கட்டம் 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அது வரையில் கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு காணப்பட்டது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 323 | 163 | 160 |
| (ii) | மூன்றாம் நிலை | 505 | 326 | 179 |
| (iii) | இரண்டாம் நிலை | 771 | 709 | 62 |
| (iv) | ஆரம்ப நிலை | 175 | 155 | 20 |
| (v) | ஏனையவை | 03 | - | 03 |
| | மொத்தம் | 1,777 | 1,353 | 424 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற தொகைமதிப்பு நடவடிக்கைகளில் நேரடியான பங்களிப்பைக் காண்பிக்கின்ற பணிப்பாளர் (தொகைமதிப்பு), பிரதிப் பணிப்பாளர் (தொகைமதிப்பு), புள்ளிவிபரவியலாளர், புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் 272 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) திணைக்களத்தில் பேணப்படுகின்ற தொகைமதிப்புத் தரவுகளை தயாரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் தரவுகளை கணனிமயப்படுத்துதல், தரவு தொகைமதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இணையதளம் ஊடாக தகவல்களை வழங்கும் நடவடிக்கைகள், திணைக்களத்தின் சகல பிரிவுகளிலும் கணனி பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள், மாவட்ட மட்டத்தில் தரவுகளை கணனி மயப்படுத்தல், திட்டங்களை வெற்றிகரமான நிறைவேற்றுதல் மூலம் துரிதமாக தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வழியமைத்தல், தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் நோக்கமாக இருந்த போதிலும் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுகின்ற தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப சேவையின் சிரேஷ்ட நிலையில் அங்கீகரிக்கப்பட்ட 28 பதவிகளில் 17 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.